பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00 பக்கங்கள் எட்டு **Registered as a News paper in Srilanka**

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2034 | தை 2 | செவ்வாய்க்கிழமை (15.01.2002) | தொலைபேசி 3378 | ஒலி 27



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜயவர்தனா, இணைஅமைச்சர் நூர்தீன் மன்சூர் மற்றும் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று சிதைவடைந்துள்ள சாவகச்சேரி நகரமையத்தைச் சுற்றிப் பார்வையிட்டதை முதல் இரு படங்களிலும், பருத்தித்துறை இறங்கு துறையைப் பார்வையிட்டதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படம்:-கோபி)

## (தீர்வுக்கான அரசின் நிலைப்பாட்டுடன்)
# நோர்வேக்குழு லண்டன் விரைவு
# பாலசிங்கத்துடன் இன்று பேச்சு

## முக்கிய முடிவுகள் வெளிவரலாம்

(ஒஸ்லோ)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நோர்வேயின் வெளிவிவகார பிரதியமைச்சர் ஐவர் ஹெல்கீசன் தலைமையிலான சமாதானகுழு இன்று காலை லண்டனுக்கு புறப்பட்டு செல்கின்றது. லண்டன் செல்லும் இச்சமாதானக் குழுவினர் இன்று மாலையே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளனர்.

யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கான உடனடித்தீர்வு ஆகிய மூன்று அம்சங்களையும்

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனான பேச்சுவார்த்தையை அடுத்து கடந்த பத்தாம்

லுள்ள நான்குகட்சித் தலைவர்கள் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிறோன் பெனாண்டோ

## அரியாலை பகுதியில் புலிகளின் நடமாட்டம்?

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் இராணுவ முன்னரங்க காவலரண் பகுதிகளில் நேற்று மாலை இனந்தெரியாத இளைஞர்கள் சிலரின் நடமாட்டம் காணப்பட்டதாக படைத்தரப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே யுத்த நிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் அமுலில் இருப்பதனால் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே இவ்வாறு வந்துசென்றிருக்கலாம் யாடியதாகவும் தெரியவருகிறது.

பிரதியமைச்சர் ஜவா ஹெலகீசன் தலைமையிலான சமாதானகுழு இன்று காலை லண்டனுக்கு புறப்பட்டு செல்கின்றது. லண்டன் செல்லும் இச்சமாதானக் குழுவினர் இன்று மாலையே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளனர்.

யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கான உடனடித்தீர்வு ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தையை கடந்த 5ம் திகதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே சமாதானக்குழு லண்டனில் நடத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனான பேச்சுவார்த்தையை அடுத்து கடந்த பத்தாம் திகதி கொழும்பு வந்திருந்த நோர்வேயின் சமாதானக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பிலுள்ள நான்குகட்சித் தலைவர்கள் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிறோன் பெனாண்டோ இந்தியத் தூதுவர் கோபாலகிருஸ்ண காந்தி ஆகியோரை தனித்தனியே சந்தித்து விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக எடுத்துக்

(8ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் இராணுவ முன்னரங்க காவலரண் பகுதிகளில் நேற்று மாலை இனந்தெரியாத இளைஞர்கள் சிலரின் நடமாட்டம் காணப்பட்டதாக படைத்தரப்பு வட்டாரங்களி லிருந்து தெரிய வருகிறது.

அப்பகுதிக்கு வந்த இளைஞர்கள் சிலர் இராணுவ காவலரண் பகுதியில் உலாவி திரிந்ததாகவும் படையினருடன் நட்புபாராட்டி உரையாடியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப்புலிளுக்கும் அரசுக்கும் இடையே யுத்த நிறுத்தமும் மோதல் தவிர்ப் பும் அமுலில் இருப்பதனால் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே இவ்வாறு வந்துசென்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அண்மையில் நாகர் கோவில் காவலரண் பகுதிகளிலும் இத்தகையதொரு நடமாட்டம் காணப்பட்டமை தெரிந்ததே. (இ104)

# அமைச்சர் ஜயலத் சாவகச்சேரிக்கு விஜயம்

## சேதங்களை நேரில் பார்த்தார்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜெயலத் வன்னிக்கான, புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மன்சூர் மற்றும் இந்து கலாச்சார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று தென்மராட்சிப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

வரணியூடாக கொடிகாமம்

(8ம் பக்கம் பார்க்க)

# தடை நீக்கப்பட்ட பொருட்களுடன் 30லொறிகள் இன்று வன்னிக்கு

## அமைச்சர்கள் ஜயலத்-அமரதுங்கா அனுப்பிவைப்பர்

(வவுனியா)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களும் தடைநீக்கப்பட்ட ஏனைய இருபது வகையான பொருட்களும் இன்று காலை 30லொறிகளில் எடுத்துச்செல்லப்படுகின்றது.

இந்த பொருட்களை புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன்அமரதுங்கா ஆகியோர் இன்று வவுனியாவில் வைத்து அனுப்பிவைப்பர் இதே வேளை அமைச்சர்கள் இருவரும் பிரமனாளம்குளம் சோதனைச்சாவடிக்குச் சென்று அங்கு இடம்பெறும் சோதனை நடைமுறைகளையும் நேரில் பார்வையிடுவார்கள்.

வாரத்தில் திங்கள், புதன்,

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ் பல்கலைக்கழகத்திற்கும் அமைச்சர் ஜயலத் விஜயம்

(அலுவலக நிருபர்)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மன்சூர் ஆகியோர் நேற்று யாழ் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கூட்டமொன்றும் அங்கு நடைபெற்றது இக்கூட்டத்துக்கு, தமிழ்க்காங்கிரசின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, பல்கலைக் கழக பேரவை உறுப்பின்ர்கள், ஜேர்மன்தூதுவர், ஆசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளர்கள் வன்னி செல்வர்?

(வவுனியா)

உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு செல்வதற்கு பாதுகாப்பமைச்சின் அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகிடைத்ததும் இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானிப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# யாழ் மேயராக கந்தையன் நாளை பதவிப்பிரமாணம்

(யாழபபாணம)

யாழ்மாநகர சபையின் புதிய மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த பிரதி மேயர் செல்லன் கந்தையன் நாளை புதன் கிழமை பதவி ஏற்கவுள்ளார்.

கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ்மாவட்ட எம்பியுமான வீ.ஆனந்தசங்கரி முன்னிலையில் இவர் மேயராக பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

இப்பதவிப்பிரமாண வைபத்தில் யாழ்மாநரசபை ஆணையாளர், நிர்வாக உத்தியோத்தர்கள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வெளிவருகிறது

ஸாஸ்த்தா - சகஸ்ரம் த்ரீஸதி - அஷ்டோத்திரம் அடங்கிய நூல் (கிரந்தத்தில்)
(4238)

### வகுப்புக்கள்

சிறந்த ஆசிரியர்கள் மூலம் விசேடசித்தி பெற ஆண்டு 10,11 மாணவர்க்கான ஆங்கிலம், வர்த்தகம், கணிதம் மாலை வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளது தொடர்பு; 426 (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்' (4205)

### தேவை

சகல வேலைகளும் செய்யக் கூடிய கொம் போசிற்றர் தேவை பெண்பிள்ளை விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும் சரவணா அச்சகம் 233, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரச் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (C-3367)


## பொது முகாமையாளர் பணிப்பின் பேரில் விநியோகம்

(காரைநகர்)

காரைநகர் களபூமி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையில் இடம்பெற்ற மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பாக கடந்த 13ந் திகதி வலம்புரியில் வெளியான செய்தி தொடர்பில் கிளை முகாமையாளர் சங்கப்பொது முகாமையாளரின் பணிப்புரைக்கு அமையவே மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது. (இ-238)

## இனப்பிரச்சினை

தமிழ்க் கிராமசேவகர் பிரிவிலுள்ள பனாவை மேற்கு கிராமசேவகர் பிரிவையும் இணைத்து, கோறளைமத்திய பிரதேச செயலகம் உருவாக்கப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# அசுகி பருப்புடன் அரிசியும், இனிப்பும் சேர்த்து சமைத்துண்பது ஜப்பானியர் தைப்பொங்கல்

## ஜப்பானிலும் தைப்பொங்கல்

இக் கட்டுரையின் மூல ஆசிரியர்: பேராசிரியர் ஸுஸுமுஓனோ

மொழி பெயர்த்தவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்

இக் கட்டுரை 1983 ஜூலை10ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) தினகரன் வார மஞ்சரியில் பிரசுரமாகி இருந்தது அதிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய குறிப்புகள். இங்கே தரப்படுகிறது.

தொகுப்பு: கலைஞானி கலைக் கூடத்திலிருந்து:

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

நான் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய போது திராவிடச் சொல்லகராதியிலே உள்ள தமிழ்ச் சொற்களுக்கு இணையான பொருளுள்ள ஜப்பானியச் சொற்களைத் தேடினேன் வாரந்தோறும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவரான டாக்டர் தேவராஜனைச் சந்தித்து தமிழ்ச்சொற்களுக்கான மேலதிகமான விளக்கத்தையும் பெற்றேன் பழந்தமிழ்ச் சொற்களிலே யான் கொண்ட ஈடுபாட்டைக் கண்ட அவர் ஒருநாள் தமிழ் நாட்டிலே பொங்கல் என்னும் பழைய திருநாள் ஒன்றுஇருப்பதையும் அத்திருநாள் தை மாதம் கொண்டாடப்படுமென்றும் அன்று தமிழ் மக்கள் பச்சையரிசியிலே பொங்கல் செய்து உண்ணுவார்களென்றும் அவ்வழக்கம் இந்துப் பண்பாட்டினது தாக்கத்தைத் தமிழர் பெறு முன்னரேயே ஆரம்பித்து விட்டதென்றும் கூறினார்

### பருப்பும் சோறும் இனிப்புடன்

அதனைக் கேட்டவுடன் எனக்கு எங்கள் குடும்பத்து வழக்கம் ஒன்று நினைவுக்கு வந்தது தை மாதம் 15ஆம் திகதி நாங்கள் அசுகி பருப்பை அரிசியுடன் சமைத்து இனிப்பும் சேர்த்து உண்பது வழக்கம் அவ்வுணவு நன்றாக இல்லாவிட்டாலும்ஒவ்வொரு வருடமும் உண்ண வேண்டியது வழக்கமாக இருக்கின்றது இந் நினைவில் நான்தேவராஜனிடம் 'நீங்களும் இனிப்புச் சேர்ப்பதுண்டா?' என்று வினவிய போது அவர் 'இனிப்புடன் மட்டுமின்றிக் கரும்புத்துண்டங்களுடனும் பொங்கலை உண்பதுண்டு' எனக் கூறினார்.

ஜப்பானில் இவ்வாறுதை மாதம் 15ஆம் திகதி அசுகி பருப்பைச் சேர்த்த சோற்றை உண்ணும் வழக்கம் அண்மைக் காலத்து அன்று தொசாநிக்கியினுடைய நாட் குறிப்புக்களிலே தைமாதம் 15ஆம்திகதி 'இன்று நாங்கள் அசுகி பருப்புச் சோறு சமைக்கவில்லை' என்னும் குறிப்பினை வாசிக்குமிடத்து இவ்வழக்கம்10ஆம் நூற்றாண்டிலேயே கியோதே பகுதியில் பழைமையான தொன்றாக இருந்ததென்பது புலப்படுகின்றது பல்லாயிரம் மைல்களால் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் தமிழ் நாட்டிலும் ஜப்பானிலும் ஒரே மாதிரியான நாட்டார் வழக்கங்கள் இருக்கின்றன என்பதை இது உணர்த்துகிறது இது ஒரு தற்செயல் நிகழ்வா? அல்லது ஜப்பானுக்கும்தமிழ்நாட்டிற்குமிருந்த பழைமையான ஆழமிக்க தொடர்பைக் காட்டும் ஆதாரமா? எப்பொழுதாவது வாய்ப்புக் கிடைத்தால் தமிழ் நாட்டிலே நடைபெறும் இப் பொங்கல் கொண்டாட்டத்தை அங்கு சென்றுகாண வேண்டுமென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

### நகுச்சியில் ஆய்வு

தஞ்சாவூர் நகரத்திற்குவெளியே அமைந்திருந்த நகுச்சி என்ற கிராமமே எமது ஆய்வுக்குரிய கிராமமாயிற்று நாம் அங்கு சென்ற 2வதுநாள்யான் ஆவலோடு எதிர்பார்த்திருந்த விழாவாகிய பொங்கல் அவ்வூர்க் கிராமாதிகாரியின்ஒத்துழைப்பினால் எங்களுக்காக விசேடமாக நடத்திக் காண்பிக்கப்பட்டதும் 'பொங்கல்' என்னும் பெயர்ச்சொல் பொங்கு என்னும் வினைச் சொல்லிலிருந்து வந்ததாகும் அவித்தல் சூட்டினால் பொங்கச் செய்தல் பொங்கியெழல் (சந்தோஷத்துடன்) மேலே எழுதல் செழித்தல் பயனளித்தல் நுரைத்தெழல் (கடல் போல) கோபித்தெழல் என்னும் பொருள்களை பொங்கு என்ற சொல் தரும் பொங்கல் என்னும் செய்யப்பட்ட பானைதல் பொங்குதல் கொதித்தல் பெருகல் செழித்தல் உப்பு காரம் சீரகம் நெய் என்பன சேர்க்கப்பட்ட அவித்த அரிசி என்னும் பொருள்களைத் தரும் எனவே பொங்கல் என்பது அவிந்தஅவிழ்பதமெனவும் ஆகிற்று.

### மாதிரிப் பொங்கல்

அன்று புரட்டாதி மாதம் காலை வேளை சூரியனது கிரணங்கள் நகுச்சிக் கிராமத்தைத் தழுவிக் கொண்டிருந்தன அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த மேடை. ஒன்றின் மீது வாழைப்பழம் தேங்காய் போன்றவை நிவேதிக்கப் பட்டிருந்தன (எங்களுக்காகநடத்திக் காண்பிக்கப் பட்டபொங்கலாகையால் அங்கு தெய்வம் எதுவும்வணங்கப்படவில்லை) கிராமாதிகாரி மண்ணினால் செய்யப்பட்ட பானை ஒன்றினுள் பாலை விட்டு வாழையிலையின் மேல் வைக்கப்பட்ட அடுப்பில் வைத்து எரித்தார் நெருப்பு வேகமாக எரிந்த போது பானையிலிருந்த பால் பொங்கிப் பானையின் மேல் விளிம்புவரை வந்தது. அவ்வளவு நேரமும் அமைதியாக நடப்பதைப் பார்த்திருந்த கிராமமக்கள் ஒரேகுரலாகப் 'பொங்கலே பொங்கல்' எனத் திரும்பத் திரும்பச் சத்தமிட்டுக் கூவினர். நல்ல விளைச்சல் வேண்டுமென அவர்களுடைய மகிழ்ச்சி பொங்கிய ஆரவாரம் மேள ஒலியுடன் ஒன்றிணைந்து கிராமம் முழுவதுமே எதிரொலித்தது. அந்த ஆரவாரம் முடிந்ததும் கிராம அதிகாரியின்மனைவி இரண்டு பானைகளை எடுத்தார். ஒன்றில், அரிசி, பருப்பு, இனிப்பு, முந்திரிகை போன்றவற்றையும் மற்றதில் அரிசி, உப்பு என்பவற்றையும் இட்டு அடுப்பில் வேக வைத்தார். பழைய காலத்திலே சிவப்பு அரிசியே உபயோகிக்கப்பட்டு வந்ததாகவும், தற்போது பயிரிடப்படாததால் பச்சையரிசியே உபயோகிக்கப்படுவதாகவும் எங்களுக்குக் கூறினார்கள். அரிசி வெந்து முடிந்ததும் மீண்டும் சத்தம் எழ ஆரம்பித்தது. வெந்த பொங்கலிற் சிறிதளவை ஒரு பாத்திரத்தில் ஒருவர் எடுத்து வீட்டின் கூரைமேல் வைத்தார். கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து கா! கா! எனக் காகத்தை அழைத்தனர்- தங்கள் சமயச் சடங்குகளின் முடிவில் உணவை இவ்வாறு காகத்திற்கு இடும் வழக்கம் அவர்களுக்கு உண்டாம். காகத்தை அவர்கள் அழைத்தகுரல் கேட்டதும் அருகிலிருந்த மரங்களிலிருந்து காகங்கள் கூட்டமாக அப் பொங்கலை நோக்கிப் பறந்து வந்தன.

### தமிழகத் தொடர்பு

நான் ரோக்கியோவில் வாழ்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான ராமகிருஷ்ணனிடம் இவ்வழக்கங்களைக் கூறியவுடன் அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. தமது நாட்டிலும் இவ்வழக்கங்களே இருப்பதாகக் கூறி உடனடியாக ஒரு தாளில் பொங்கல் நாளில் ஒலிக்கப்படுகின்றசொற்றொடர்களையும் எழுதித்தந்தார்.

பொங்கலோ பொங்கல்<br>
பாற்பொங்கல், தேன்பொங்கல் வருஷம் பூரா பொங்கல்<br>
பொங்கலோ பொங்கல்

பின்வரும் சொற்றொடர்களையும் மக்கள் பெரும்பாலும் ஒலிப்பதாகக் கூறினார்.

நெய்ப்பொங்கல்<br>
சக்கரைப் பொங்கல்<br>
வெண் பொங்கல்

இன்னும் உழவர்களிடையே எல்லோருமாகத் தமது வீட்டைச்சுற்றி இச் சொற்தொடர்காணஒலிக்கின்ற வழக்கம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

அந்தப் புரட்டாதிமாதம் காலைவேளையில் நகுச்சிக் கிராமத்திலே பால்பொங்கிய போது கிராமத்து முதியவர்களும் இளைஞர்களுமாக பொங்கலோபொங்கல் என்று ஆரவாரித்தபோது அதே ஒலியினை ஜப்பானிலும் கேட்கலாமென நான் எண்ணியிருக்கவில்லை ஆனால் என்னுடைய மூதாதையர்களும் பன்னெடுங்காலம் முதல்சிறிய புதுவருடத்தினதன்று பொங்கியபொழுது ம்வீட்டைச்சுற்றியும் தெருக்களிலே பாடித்திரிந்த போதும் நல்ல விளைச்சலை வேண்டிப் பொங்கலோ பொங்கல் என்றுஒலித்துள்ளனர் என என்னுடைய ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது வழக்கங்கள் அவைநடைபெறும் நாள் அன்று ஏற்படுத்தப்படும் ஒலி ஆகியவற்றிடையே காணப்படும் இவ்வொற்றுமை ஜப்பானுக்கும் தமிழ் நாட்டுக்குமிடையேயுள்ள ஆழமான அடிப்படை தொடர்பினை வெளிப்படுத்து கின்றது.

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சகல மக்களும் முன்வரவேண்டும்

## பொங்கல் செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் இனப்போரை முடிவுக்கு கொண்டுவர அனைத்து மக்களும் முன்வரவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள விடுத்துள்ளார்.

பொங்கல் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனங்களுக்கிடையே நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, அதன்மூலமான அழிவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க, இலங்கை மக்கள் அனைவரும் இனமத மொழி வேறுபாடின்றி முன்வரவேண்டுமென்றும் ஜனாதிபதி மேலும் கூறினார். (இ)

## திருமறைக் கலாமன்றம் இன்றுமுதல் இணைய தளத்தில் இணைவு

(ஈச்சமோட்டை)

திருமறைக் கலாமன்றம் இன்றிலிருந்து இணையத் தளத்துடன் இணைகின்றது. யாழ்ப்பாணத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள திருமறைக் கலாமன்றம் உலகெங்கிலும் தனது கிளைகளை நிறுவி நீண்ட காலமாக கலைத்துறைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலாமன்றம் இணையத்தளத்துள் இணைவதனால் அதனால் நடத்தப்படும் கலை நிகழ்வுகளை உலகம் பூராக உள்ள மக்களும் உடனுக்குடன் நேரடியாக காணக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளை அறியவிரும்புவோர் இன்று முதல் WWW CPATEAM ORG என்ற திருமறைக் கலாமன்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-59)

# யாழ். கல்வியியற் கல்லூரிக்கு குறைந்தளவு மாணவர்களே அனுமதி

## பீடாதிபதி கமலநாதன் கவலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இயங்கும் கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாண்டு 200 மாணவர்கள் தெரிவானபோதும் வசதியீனங்கள் காரணமாக மிகக் குறைந்தளவு மாணவர்களே அனுமதிக்கப் படவுள்ளதாக கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கல்வியியற் கல்லூரியில் போதிய விரிவுரையாளர் இன்மையாலும் விடுதிவசதிகள் இல்லாததாலும் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்ட 200 மாணவர்களையும் அனுமதிக்கமுடியாமல் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (வ


சம்பந்தப்பட்டோருக்கு:-

**ஆற்றல்**

எமது 18வது இதழது கட்டுரைகள் சகலதும் தயாராக உளளன.

ஆனால் 17வது இதழ் அச்சிட்டமைக்கான கொடுப்பனவு செலுத்த வேண்டியுள்ளது. எம்மிடம் கையளிக்கவென பணத்தைவைத்திருப்போரும், நிலுவைசெலுத்த வேண்டியோரும் தயவு செய்து மணியோடர் மூலம் ''சுண்டுக்குளி'' தபாலகத்தில் ''ஆற்றல் ஆசிரியர்'' பெற்றுக் கொள்ளும் வகையில் அனுப்பும்படி அன்பாக வேண்டுகிறோம்.

ஆற்றல் ஆசிரியர்.

76, கண்டி வீதி,<br>
யாழ்ப்பாணம்.

(4202 )

# மதத்தினை மதிக்காது மதங்கொண்டோர்
# சிந்தை தெளியவைத்த சுவாமி விவேகானந்தர்

ஆர்ப்பரிக்கும் அலை கடலின் ஆழத்திலிருந்து எழுந்துவரும்அந்த ஆதவன் புதியதொரு நாளை தினமும் நமக்காகத் தருகின்றான். நமக்காகப் பூத்த அந்த இனிய நாளில் நாம் என்ன செய்கின்றோம்?மதத்தின் பேரால் மனிதத்தை மரணிக்கச் செய்கின்றோம். பிறருக்கு நன்மைகளை விடத் தீமைகளையே அதிகம் செய்கின்றோம். பழமையைப் பெருமையாகப் பேசி அர்த்தமற்ற சடங்குகளை அவசியப்படுத்தி அது ஓர் உண்மை போலவே ஆக்கிவிடுகின்றோம். சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காகப் பிறரை ஏமாற்றிப் பிழைக்கின்றோம்.இவ்வாறு ஆர்ப்பரித்து அலைக்கழியும் எம் மத்தியில் தீமைகளைச் சுட்டெரிக்கும் சூரியனாய், எம் மன அழுக்குகளை நீக்க மின்னலெனத் தோன்றிய பேரொளியே சுவாமி விவேகானந்தர்.

### நல்லதை நாடும் ஆன்மசக்தி

மிருகமாய் இருந்த மனிதனை மனிதனாக்கியது மதம். மதங்கள்புறத்திலிருந்து வருபவைஅல்ல. மனமும்உடம்பும் இருக்கும் வரை சிந்தனையும் வாழ்க்கையும் நிலைக்கும் வரை மத உணர்வை மனிதனால் விடமுடியாது என்பது சுவாமியின் நம்பிக்கை. ஆனால் இன்று மனிதன் மதங்கொண்டுள்ளான். அதனாலேயே மனிதத்தை மறந்து மதத்தைப் போற்றுகின்றான். இங்குதான் சுவாமியின் சிந்தனை எம் சிந்தையைத் துண்டுகின்றது. மனித உள்ளத்தில் ஏதோ ஒன்று ''நம்மை செய்வது நல்லது'' என்று சொல்கிறது. அந்தச் சக்திதான் ஆன்மா. எல்லையற்ற சக்தியாக, வசீகர அழகுடையதாகத்தோன்றும்அந்த ஆன்பானைவத்தான் நாம் கடவுள் என்று அழைக்கின்றோம். மதம் உனக்குக் காட்ட முயற்சித்ததும் அதைத்தான். ஆனால் நாமோ மதத்தின் பேரால் மனிதர்களை மோதவைத்து மதத்தை வாழவைக்க முயற்சிக்கின்றோம். இந்நிலையில் சுவாமியின் சிந்தனை எமக்குத் தரும் தகவல், என்றும்

> ஆன்மீக வாரத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

இருப்பவரான எல்லாம் வல்லவரான எப்போதும் விழித்துக் கொண்டிருப்பவரான அந்தக் கடவுள் உங்களிடம் உலகை ஒப்படைத்து விட்டுச் செத்துப்போனாரா? இல்லை.இந்தப் பரந்த ஆகாயமே அவரது திறந்த கண்கள். அவர் இறந்து விடவில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் அவர் செயல் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.இது கடவுளின் உலகம். நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்டது என்பதாக அமைகின்றது. அவசரப்பட்டு மதத்திற்காக மதத்தின் பேரால் எம்மை நாம் வருத்திக் கொள்ள வேண்டாம். பகைத்துக் கொள்ள வேண்டாம்.

### சிந்தனைத் தேடல்

நமக்கு நன்மை விளைநதால் நல்லது.தீமை விளைந்தால் தீயது. இதுதான் எமது குறுகிய எண்ணம். பிறருக்கு நன்மை செய்வதால் எனக்கு என்ன இலாபம். என்பதாக எமது சமூக நோக்கு அமைகிறது.எல்லாம் வியாபாரமயம்.இலாபம் தராத எதையும் செய்ய நாம் தயாரில்லை. இன்றைய இந்நிலையை தன் தீர்க்கதரிசனத்தில் உணர்ந்த சுவாமிகள் தன் சிந்தனையில் எமக்கு உணர்த்தியது யாதெனில், சமயலறையில் உள்ள தீ நல்லது அல்ல தீயதும் அல்ல அந்தத் தீ சமைக்க உதவும்போது அதனை வாழ்த்துகின்றீர்கள், உங்கள் விரலைச் சுடும் போது தூற்றுகிறீர்கள். இதுபோலவே பிரபஞ்சம் நல்லதும் அல்ல தீயதும் அல்ல.உலகம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் இருக்கும். உள்ளதைக் கொண்டுதிருப்தியாக இருங்கள் என்பது என்று எல்லா மிருகங்களும் அப்படித்தான் இருக்கின்றன.அதனால் தான் அவை மிருகங்களாக இருக்

**தரிசனம்**

கின்றன.மனிதன் இப்போது உள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்து தேடலை விடுவானானால் அவன் மறுபடியும் மிருகமாகி விடுவான் அப்பால் என்ன இருக்கிறது எனும் தேடல்தான் மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ளவேறுபாடு இயற்கையில் மனிதன் மட்டும்தான் மேலே பார்க்கின்றான். மற்றவை எல்லாம் கீழே பார்க்கின்றன. உங்கள் உடை, சட்டைப் பையில் இருக்கும் பணம் குடியிருக்கும் வீடு ஆகியவற்றைப் பொறுத்ததல்ல உண்மை முக்தி.தேடலின் மூலம் உங்கள் மூளையில் உள்ள ஆன்மீக சிந்தனைச் செல்வத்தைப் பொறுத்தது என்கிறார் சுவாமிஜி. மதத்தின் பேராலும் மதவழிபாடு, சடங்கு, நம்பிக்கையின் பேராலும் மக்களை ஏமாத்தும் போலிப் பேர்வழிகள். தெய்வத்திடம் தாம் நேரே பேசுவது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி பணம் சம்பாதிக்கும் ஏமாற்றுக் காரர்களையும் இன்று நாம் கண்டுவருகின்றோம். இவர்களின் ஏமாற்று வித்தைகளை உடைத்தெறிந்து தூய வழிபாட்டையும் சித்தத்தைத் தூண்டி உண்மையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலையும் சுவாமி விவேகானந்தர் எமக்கு காட்டியிருக்கின்றார்.

### குருட்டு நம்பிக்கை

குருட்டு நம்பிக்கை என்ற பொருளில் எந்த நம்பிக்கையுமில்லை. உண்மையாக எந்தப் பெரிய போதகரும் அப்படிப் போதித்ததில்லை. சீரழிவின் காரணமாகத்தான் இது நிகழ்கிறது. எழுந்து நில்லுங்கல், பகுத்தறிவுடன் பாருங்கல், கண்மூடித்தனமான எதையும் நம்பாதீர்கள். சிந்தித்து சீர்தூக்கிப் பாருங்கள்.முடிவு பகுத்தறிவிற்கு ஒத்துவருமாயின் ஏற்றுக் கொள்ளுங்கள். உண்மை மறைந்திருக்காது. நாம் அனைவரும் சுவாமி விவேகானந்தரது பாதையில் நம் பயணத்தை தொடர்வோம் என எமக்காக பூத்த இப்புதிய நாளில் திடசங்கற்பம் செய்வோம்.

ஆதாரம் 'மதம்ஒருதேவையா'

## இராசி பலன்

15-01-2002
(தை 2, செவ்வாய்)
துதியை மு. இ 9.48 வரை
திருவோணம் மா. 5.47 வரை
ராகுகாலம்-3.34-5.04
சுபநேரம்-11.04-12.34
மாட்டுப்பொங்கல்

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும்' தொழில்முயற்சி, சுபநிகழ்வு, கீழ்ப்படிவு.

**இடபம்**
தனவரவு, திடீர்பயணம், பெரியோர்மதிப்பு, வீண் பயம்.

**மிதுனம்**
காரியதடங்கல், வீண் மனஸ்தாபம், உடல்சோர்வு, எதிர்பாராத அச்சம்.

**கடகம்**
திடீர்பயணம், நல்லவரவேற்பு, முயற்சி கைகூடும், திடீர்சோகம்.

**சிங்கம்**
தொழில்விருத்தி, சத்துருஜயம், காரியநன்மை' மனமகிழ்ச்சி.

**கன்னி**
வியாபாரசிறப்பு, பிரயாண இடையூறு, மனச்சஞ்சலம், தாழ்ந்த சுபாவம்.

**துலாம்**
தன்னம்பிக்கை குறைவு, ஆரோக்கியக்குறைவு, அற்பர் நேசம், முயற்சிதாமதம்.

**விருச்சிகம்**
சநதோஷமான சம்பவம், தனவரவு, குடும்ப நன்மை, கூட்டுமுயற்சி.

**தனுசு**
வண்விவாதம், தனவிரயம், முயற்சி மந்தம், மாதர்நட்பு.

**மகரம்**
கற்பனை மிகுதி, வசீகரம், முயற்சிகைகூடும், நண்பர்கள உதவி

**கும்பம்**
வீண்அலைச்சல், காரிய தாமதம், திடீர்நன்மை, மனச்சஞ்சலம்.

**மீனம்**
காரியநன்மை, பெருமையடைதல், உறவினர் சந்திப்பு, தனவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தமிழர்தம் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே!
# எரிக்சொல்ஹெய்மின் இந்தக் கூற்றை
# மீளப்பெறவேண்டும் என்கிறது ஜே. வி. பி

(கொழும்பு)

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளைத் தான் ஏற்றுக் கொள்வதாக நோர்வே அனுசரணையாளர் குழுவிலுள்ள எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்திருப்பதை ம.வி.மு கண்டித்துள்ளது.

எந்தக் கோணத்திலிருந்து நோக்கினாலும் இது கண்டிக்கத்தக்கதே என்று அதன்அரசியற் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணி நாடுகள் பலவிடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று வகைப்படுத்தியுள்ளன. தனது நாடு விடுதலைப்புலிகளை இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளமாட்டாது என்று கடந்தஆண்டு கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதுவர் கூறியிருந்தார். இந்த நிலையில்சொல்ஹெய்ம் வெளியிட்டுள்ள அறிக்கை இந்நாட்டின் தமிழ் மக்களை ஒரு பயங்கரவாத அமைப்பிடம் ஒப்படைப்பது போலாகும்.

விடுதலைப் புலிகள் தமிழர் மத்தியில் ஏதோ ஒருவிததலைமைத்துவத்தை பெற்றிருப்பார்களாயின் அது தமிழர்கள் மத்தியில் சுதந்திரமாக நடத்தப்பட்ட பரஸ்பர கலந்துரையாடல். மற்றும் பின்னிய செயல் விளைவுகளினால் ஏற்படுத்தப்பட்டதல்ல. எனவே எரிக்சொல்ஹெய்ம் புலிகளுக்கு வழங்கியிருக்கும் நற்சாட்சிப்பத்திரத்தை மீளப்பெற வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## டெயிலிநியூஸ் ஆசிரியர் காலமானார்

(கொழும்பு)

லக்கின, டெயிலி நியூஸ் ஆகியபத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் சித்திரிநிமால்சாந்த (வயது 45) நேற்று காலமானார்.

அலுவலகத்திலிருந்து மதிய போசனத்திற்காக வீடுசென்ற சமயம் நெஞ்சு வலி ஏற்பட்டது அவசர அவசரமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில்அனுமதிக்கப்பட்ட போது அங்கு அவர் உயிரிழந்துள்ளார். (இ-4)

## சமாதான சகவாழ்வு மலர
# சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் புதிய அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும்
## நல்லைஆதீனமுதல்வர் அமைச்சர் ஜயலத்திடம்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதான சகவாழ்வு மலர சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் அணுகி உரிய வகையில் பேச்சுவார்த்தையைத் தொடர்வதுடன் இதற்காக புதிய அரசாங்கம் இயன்றவரை பாடுபட வேண்டும்.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா பொங்கல் தினமான நேற்று நல்லை ஆதீனத்திற்குச் சென்று முதல்வரிடம் அருளாசி பெற்ற பின்னர் இடம்பெற்ற சந்திப்பில் நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் அமைச்சரிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

வீதித் தடைகளை அகற்றி தமிழ் மக்களின் தங்குதடையற்ற சுதந்திரமான நடமாட்டத்திற்கு வகை செய்தல்,

இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் துன்பங்கள்மத்தியில் வாழ்ந்து வரும் வலி. வடக்கு உள்ளிட்ட ஏனைய பகுதி மக்களை மீளக் குடியேற்ற உடனடி நடவடிக்கை எடுத்தல்,

வணக்கஸ்தலங்களில் நிலைகொண்டுள்ள படையினரை அகற்றி மக்களின் இறைவழிபாட்டில் ஏற்பட்டுள்ள இடையூறுகளை இல்லாது செய்தல், பொருளாதாரத்தடையைஅகற்றுதல் ஆகிய பல கோரிக்கைகள்நல்லைஆதீனமுதல்வரால் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன. (உ)

## வெளிமாவட்ட
# மாணவர்கள் பலர் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் விடுமுறைக்கு வீடு சென்ற வெளி மாவட்ட மாணவர்கள் பலர் இன்னமும் திரும்பவில்லையென தெரியவந்துள்ளது.

கப்பல் சேவை சீரின்மை காரணமாகவே, மேற்படி விடுமுறைக்குச் சென்ற மாணவர்கள் இன்னமும் வந்து சேரவில்லை என்று கூறப்படுகின்றது. (உ)

# இரு வேறுஇடங்களில் இருவர் கிணற்றுக்குப்பலி

இருவேறுஇடங்களில்கிணற்றுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்த இருவரின் சடலம் நேற்று யாழ் போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த ஆறுமுகம் உமாசஸ்வரி (வயது-17) மற்றும் குருநகர் 2ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சந்திரசேகரன் கனிஷ்ரன் (வயது-7) ஆகியவர்களது சடலமே வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-104,233)

# வெளிநாட்டுத் தூதுவர் பதவிக் காலம் 3 வருடங்கள்

(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதுவர்கள் 3 வருடங்களை பூர்த்தி செய்ததும் வேறு நாடுகளுக்கு மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அரசின் இம் முடிவிற்கு அமைய 15 வெளிநாட்டு தூதுவர்கள் இலங்கைக்கு திரும்புமாறு அழைக்கப்படவுள்ளனர். இவர்களுள் அமெரிக்க இந்திய தூதுவர்களும் அடங்குவர். (உ-225)

### யா/உயர்தர தொழில்நுட்பக் கல்லூரியில்

# முதலாம் தவணைக்கான விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர்தர தொழில்நுட்ப நிறுவன 2 ஆம் வருட பகல் மாணவர்களுக்கு இன்றும், 3, 4 ஆம் வருட பகல் 2, 3, 4 ஆம் வருட பகுதி நேர மாணவர்களுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையும் முதலாம் தவணைக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. (உ)

## வலம்புரியின் ஆதரவில்

மூத்தபத்திரிகையாளர்

## அமரர் சி. செல்லத்துரை

அவர்களின்

ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட

## சிறுவர் பாடல் போட்டி முடிவுகள்

### சான்றிதழ் பெறுபவர்களின் பெயர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

மீனா அருணாசலம்
''கற்க வேண்டும்''
கிராம்புவில், சாவகச்சேரி.

இரத்தினசபாபதி குலசிங்கம்
''வேற்றுமையை வேரோடு சாய்ப்போம்''
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

பா. சின்னையா
''சின்னச் சின்னக் குருவிகள்''
535, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

சி. சிவதாஸன்
''பாரில் புதுமைகள் சேர்த்திடுவீர்''
இல 58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

எம். பிருந்தா
''ஒன்றாய்க் கூடி நன்றாய் வாழ்வோம்''
ஸ்ரீவாகீஸ்வரன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

மு. வே. அன்பழகன்
''சிறுவர் துயர் தீர்ப்போம்''
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பங்கஜமலர் புஞ்சலிங்கம்
'வெண்புறாவே வெண்புறாவே''
புனித செபஸ்தியன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தம்பிராஜா பரமலிங்கம்
''நாங்கள் வாழும் தேசம்''
நாவலடி. ஒழுங்கை, வண்ணை வடமேற்கு யாழ்ப்பாணம்.

சாந்தன் சத்தியகீர்த்தி
''அறம் வெல்லும்''
அரியாலை.

அ. பவித்திரன்
''யார் துடைப்பார்''
யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

வித்தியாசன்
''நம் நாடு''
54, புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

நோ-அன்ரனீஸ்
''அம்மா பாருங்கள் அங்கே''
10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

தர்மினி பத்மநாதன்
புதுமைகள் பலவும் செய்திடுவோம்''
218, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஆனந்தராசா அன்னைதாஸன்
''சொல்லிலல்ல செயலிற் காட்டு''
உரும்பிராய்.

பிறேமலதா மகேந்திரராஜா
''பலம் பெறவே''
588 7, நாவலர் வீதி, அரியாலை.

(நாளை தொடரும்)

# தென்மராட்சிப் பாடசாலைகள் இயங்குவதற்கு ஏற்றவழி செய்க

### யாழ். வந்த அமைச்சர் ஜயலத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் யுத்தத்தால் சேதமடையாதுள்ள பாடசாலைகள் உடனடியாக இயங்குவதற்கு தங்களது முழு ஆதரவையும் வேண்டுகின்றோம்.

தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம் யாழ். வந்துள்ள புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கையளித்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தென்மராட்சிப் பகுதியிலுள்ள பல பாடசாலைகள் இராணுவத்தினரின் வசம் உள்ளன. அவர்களை அங்கிருந்து அகற்றி அப்பாடசாலைகளை விரைவில் இயங்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

பெரும்பாலான பாடசாலைகள்சேதமடைந்து இயங்க முடியாத நிலையில் உள்ளதுடன் மாணவர்களும் ஆசிரியர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

எனவே அப்பாடசாலைகள் இயங்குவதற்கு தேவையான சகல வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

மட்டுவில் பகுதியில் உள்ள முன்னணிப் பாடசாலையான சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் உட்பட வேறு பல பாடசாலைகளும் சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள முன்னணிப் பாடசாலைகளான டிறிபேக்கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியனவும் முழுவதும் சேதமடைந்துள்ளன.

இப்பாடசாலைகளைத் தாங்கள் நேரில் பார்வையிட்டு அவை புனரமைக்கப்பட்டு மீள இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (எ)

# பாம்புக்குச் சுட்ட படையினர் காயம்

(கொழும்பு)

பாம்பொன்றை நோக்கி படையினர் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்த சமயம் ரவைகள் தண்டவாளத்தில் பட்டுத் தெறித்ததில் மூன்று படையினர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா 5ஆவது பாதுகாப்பு வலயப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அப்பகுதியில் காவற்கடமையில் நின்ற படையினர், ஊர்ந்து சென்ற பாம்பை கொல்லும் நோக்கில் துப்பாக்கியால் சுட்ட போதும் ரவைகள் பாம்பில் படாது, தண்டவாளத்தில் பட்டு இவர்கள் மீது தெறித்ததில் படுகாயமடைந்ததாகத் தெரியவந்துள்ளது. (உ)

## சாரதி அனுமதி பத்திரம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

முத்து சுவாமி மோகன குமார் என்பவரது என். டி. எல். 0014774 எனும் இலக்கமுடைய சாரதி அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

அளவெட்டி வடக்குஅணிஞ்சல்பதிவிநாயகர்ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (உ-226)

## பொதுக் கூட்டம்

(அரியாலை)

யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் மு.ப 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் இ. க. இராசேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-225)

# வணக்கத் தலங்களுக்கு அமைச்சர் விஜயம்

## ஆசி பெற்றேகினார்

யாழ். வந்துள்ள அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன நேற்றைய தினம் வணக்கத் தலங்களுக்குச் சென்று ஆசி பெற்றார்.

இந்தவகையில், ஆதீன மண்டபம் மற்றும் நாக விகாரை ஆகியவற்றுக்குச் சென்று ஆசிபெற்றுச் சென்றார். (உ)

# தேசிய தொழிற்கொள்கை அறிமுகப்படுத்த திட்டம்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இலங்கைப் பிரஜைகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க தேசிய தொழில் கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வேலை வாய்ப்பு தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தில், வேலையில்லாப்பிரச்சினை, அபிவிருத்தி, அந்நியச் செலாவணி ஆகிய விடயங்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. (உ)

# கண்டி -கொழும்பு ரயில் சேவை வழமைக்கு

(கொழும்பு)

கண்டிகொழும்பு ரயில்சேவை வழமைபோல் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் றம்புக்கணை கினிவெல்லாப்பிட்டிய பகுதியில் தடம்புரண்டதில் 10 பேர் பலியானதுடன் 249 பேர் படுகாயமடைந்தமை தெரிந்ததே.

இதேவேளை கடுகதி தபால் சேவைகள் மாத்திரம் இடை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் விபத்து இடம்பெற்ற பாதையை புனரமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தடம்புரண்ட ரயிலை அப்புறப்படுத்தும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி விபத்தினால் ரயில்வேத்திணைக்களத்திற்கு ஏழரைக் கோடி நட்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

### கடல்வலய தடைச்சட்டம்,

# நீக்குவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளிவரும்!

### ஹாட்லிக் கல்லூரியில் அமைச்சர் ஜயலத் உரை

(கொழும்பு)

கடந்த 7 ஆண்டுகளாக, கடல்வலயத் தடைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்கள் மீன்பிடிக்கும் நேரத்தையும் தூரத்தையும் மாற்றும் அறிவிப்பு விரைவில் வர்த்தமானிமூலம் வெளியிடப்படவிருப்பதாக யாழ். வந்துள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் உரையாடுகையில் இவ்வாறு குறிப்பிட்ட அமைச்சர்,

யாழ்ப்பாணத்தின் கேந்திரஸ்தானம் எனக் கருதப்படும் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பொருட்களை துரிதமாக இறக்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (உ-8)

## இன்று ஒரு தகவல்

### உன் மனமே உனக்கு எதிரி

மனிதனுக்கு ஆக்கத்தைத் தருவதும் அழிவைத் தருவதும் அவரவர் மனமே. திருமணத்தின் போது திருப்தி என்பதை மனமே வெளிக்காட்டும். ஆனால் அதை முழுத் திருப்தி என ஆசுவாசப்படுத்திக் கொள்வது முடியாத காரியம். ஆசிரியர் ஒருவரைத் திருமணம் செய்த ஒருத்திக்கு காலப் போக்கில் வர்த்தகர் ஒருவரைத் திருமணம் செய்திருக்கலாம் என்ற எண்ணம் தோன்றும். கறுப்புப் பெண்ணைத் திருமணம் செய்த ஒருவரின் மனம் சிவப்புப் பெண்ணுக்காக ஏங்கும். சிவப்புப் பெண்ணைத் திருமணம் செய்த ஒருவரின் மனம் கறுப்புப் பெண்ணுக்காக ஏங்கும். இதைவிட ஹோட்டலில் சாப்பிடும் போது வீட்டுச் சாப்பாடு ருசிக்கும், வீட்டில் சாப்பிடும் போது ஹோட்டல் சாப்பாடு ருசிக்கும், இவை எல்லாவற்றுக்கும் காரணம் மனிதமனமே. இவ்வாறாக மனதில் புரளும் மாறுபட்ட எண்ணங்களே மனித வாழ்வை வாட்டி வதைக்கின்றன.

உன் மனமே உன்னுள் உள் பொருளாக நின்று உன்னைக் காவு கொண்டு உனக்குள் ஆணவத்தைத் தோற்றுவிக்கின்றது. இவ்வாறுதோன்றிய ஆணவம் உன் மனதுள் வெடித்துச் சிதறி உள்ளது. உன்னை அறியாமலேயே நன்றைவிடத் தீதைச் செய்ய முனைகிறது இச்செயற்பாடு. உன்னையறியாமல் தற் பெருமையையுண்டாக்க, உன்னை நீ மற்றவனை விட உயர்ந்தவன் என எண்ண வைக்கின்றது. மாறாக உன்னை விட இன்னொருவன் உயர்ந்து விட்டால் உன் மீது பொறாமைப் பேயை ஏவி விடுகின்றது. இவ் வேளை உன் அகத்தின் அழகை முகம் வெளிக்காட்டுவது இயல்பு.

ஒவ்வொரு மனிதனுடைய மன வேறு பாட்டுக்குக் காரணமாக அமைவது ஹார்மோன் குறைபாடே என உளவியலாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இக்குறைபாடே மனித மனதில் வகை தெரியாத பதற்றத்தை ஏற்படச் செய்கின்றது. இக்குறை பாடுடைய சிலருக்கு இது பரம்பரை நோயாகவும் மாற்றமடைவதுண்டு. எம்மையறியாமலே மனம் தனக்குள் சூதாட்டத்தில் இறங்குகின்றது. இதன் போது ஏற்பட்ட பதற்றத்தின் மூலம் அலையும் மனதை ஒரு முகப் படுத்த வேண்டிய பொறுப்பு உன்னைச் சார்ந்ததே. இதற்கு வழி தியானமோ அல்லது ஆத்மீக சிந்தனையோ அன்றி மது அருந்துதலோ அல்லது புகை பிடிப்பதோ அல்ல. எனவே எனது எதிரியான என் மனதை ஆசுவாசப் படுத்தி என் நண்பனாக்குவது என் கடமையே என்பதை உணர்க! எம்மனதுள் உள் பொருளாக இருப்பது மனச் சாட்சியே. அதன்படி நடப்போமேயானால் எமக்குள் பிரச்சினைகள் தோன்றாது எதிரிகள் உருவாக வாய்ப்பில்லை. அதனால் எமது உள்ளம் உவகையடையும் என்பதையுணர்ந்து எம் எதிரியான மனத்தை எமது நண்பனாக்குவோம்.

மு. விகனேஸ்வரன்
கோப்பாய்

## குமாரின் கொலை தொடர்பாக
# ஜனாதிபதிக்கு அறிக்கை எதுவும் இதுவரை கிடைக்கவில்லையாம்

(கொழும்பு)

தமிழ்க் காங்கிரஸ்கட்சியின் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலம் படுகொலை தொடர்பாக கடந்த வாரங்களில் முக்கிய தகவல்கள் வெளிவந்திருந்ததும் அதில் கொலை சம்பந்தப்பட்டவர்களை ஜனாதிபதி குமாரதுங்க அறிந்திருந்தாரென்றும் ஆனால் நடவடிக்கை யெடுக்காமால் இருந்தாரென்றும் குறிப்பிடப் பட்டிருந்ததும் தெரிந்ததே.

ஆயினும், தனக்குசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிக்கையொன்றினையும் தரவில்லையென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளதுடன் அது சம்பந்தமாக விசாரணை செய்யும்படியும் கோரியுள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பந்துல விக்கிரமசிங்க குமார் பொன்னம்பலம்படுகொலைதொடர்பான அறிக்கையை தயாரித்து 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதிஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தமை தனக்குத் தெரியுமென்றும், அந்த அறிக்கையை தயாரிப்பதற்கு அந்தரங்கமாக செயற்படக்கூடிய தட்டச்சாளரை தானே ஏற்பாடு செய்து கொடுத்திருந்ததாகவும், தனது மேற்பார்வையில் நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையிலேயே அறிக்கை தயாரிக்கப்பட்டது எனவும் குற்றவியல் புலனாய்வுப் பகுதி இன்ஸ்பெக்டர் றுவன்வெத்தசிங்க என்பவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார் எம்.பி.மேற்படி விடயம் தொடர்பாக பாராளுமன்ற விவாதம்ஒன்று நடத்தப்படவேண்டுமென கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# வடபகுதி முஸ்லிம்மக்கள் மீள்குடியேற புலிகள் அனுமதிக்க வேண்டும்
## தலைவர் பிரபாவுக்கு ஹக்கீம் கடிதம்

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் இந்நேரத்தில் ஒரேமொழியைப் பேசும் இரு இனங்களுக்கிடையில், இருக்கும் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்காலத்தில் பேச்சுநடத்த விரும்புவதாக கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் விடுதலைப்புலிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழில் எழுதப்பட்ட கடிதமொன்றை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுககு ஹக்கீம் அனுப்பிவைத்துள்ளார்.

பொங்கல் வாழ்த்துக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அக்கடிதத்தில் வடக்கு முஸ்லிம்கள் மீள் குடியேறுவதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கி அவர்களுக்கு அனுமதி வழங்குதல், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம்களின் வயல் காணிகளில் முஸ்லிம் மக்கள் விவசாயநடவடிக்கைகளில்ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கல், முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம் மக்களின் தனித்துவமான கட்சியாக அங்கீகரித்தல், பொலிசிலும் இராணுவத்திலும் பணிபுரிகின்ற முஸ்லிம் இளைஞர்களை தனியாக இனம்கண்டு பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடுதல் ஆகிய விடயங்களில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ந-4)

## காங்கேசன்துறைமுகம் விரைவில் புனரமைப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தைவிரைவில் புனரமைக்கும்வகையில் இதற்கான புதிய பாரந்தூக்கியை நிறுவுவதற்கான பொறுப்பை இலங்கை கப்பல் உரிமையாளர் சங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி புனரமைப்புத் தொடர்பான முடிவு அண்மையில் புனர்வாழ்வு அமைச்சர் தலைமையில் அமைச்சில் நடைபெற்ற பொருட்களை கப்பலில் ஏற்றுவோர் சங்கம், கப்பல் உரிமையாளர் சங்கத்தினர்களுக்கிடையேயான கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (உ)

## 62 மில்லியன் தேவை

(அரியாலை)

யாழ்.கண்டி ஏ-9 வீதியைத் திருத்திச் செப்பனிட 62 மில்லியன் ரூபா தேவை எனமதிப்பிடப்பட்டுள்ளது. (உ-225)

## உள்ளூராட்சி தேர்தல் பிரசுரங்கள் தயார்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான தினம்குறிக்கப்படாத போதிலும் இத்தேர்தல் குறித்த அறிவித்தல் பிரசுரங்கள் 05 இலட்சத்திற்கு மேல் அச்சிடப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் முதலாம் திகதி இத் தேர்தல் இடம் பெறும் என முன்னர்அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்,2 வாரங்கள் பிற்போட்டுள்ளதாக அறிவித்துள்ளமை தெரிந்ததே. (உ-225)

## பஸ்சேவை அதிகரிப்பு

(அல்லாரை)

மிருசுவிலுக்கும் யாழ். நகருக்குமிடையிலானபேருந்துச் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் திற்...

## திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டப திறப்பு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்திறப்பு விழா எதிர் வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 8.00 மணிக்கு ஆதீன முதல்...

அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம், கட்டடப் பொறியியலாளர்ப.கிரிதான் யாழ்.மாநகர...

வன்னிப் பிரதேசத்தில் சேதமான

## இந்துக் கோவில்களுக்கு இழப்பீடு கோரப்பட்டுள்ளது

# இழப்பீடு கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசங்களில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களின் விபரங்களை சேகரித்து அரசாங்கத்திடம் இழப்பீடு கோரப்பட்டுள்ளது.

வன்னிப் பிராந்திய இந்து சமய பரிபாலன சபை ஒன்றியம், இந்துக் குருமார் ஒன்றியம் என்பன இணைந்து வெளியிட்ட அவ்வறிக்கையிலேயே இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்கள் தொடர்பான செயற்பாடுகள், புனருத்தாரணங்கள், திருவிழாக்கள் என்பன இவ்வொன்றியங்களின் ஊடாகவே செயல்பட வேண்டும் எனவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-8)

### யாழில் நடைமுறைப்படுத்தப்படும்

# வீடமைப்புத் திட்டத்தை ஜயலத் நேரில் பார்வை

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமான வீடு அமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் திட்டத்தை அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்டார்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் முதற் கட்டமாக சுமார் 200 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கே இவ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளது.

தலா 85 ஆயிரம் ரூபா செலவிலான 200 வீடுகளை யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமரும் பகுதிகளில் கட்டிக் கொடுப்பதற்கு பிரதேச செயலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

இதேவேளை, தனியார் சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபட்டுள்ளன. (உ)

## மருதானையில் கிரனெற் வெடிப்பு

((கொழும்பு)

மருதானையில் உள்ள முஸ்லிம் ஒருவரின் வீட்டில் கிரனெற் வெடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டில் மறைத்து வைத்திருந்த கிரனெற்றே வெடித்ததாகவும் இது தொடர்பாக முஸ்லிம் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு நகரில் திடீர் சோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ)

## கண்காட்சி

(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் (ஐ.இ), யாழ். மாவட்ட சிறுவர் கழகங்களின் இணையத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் ஓவியப் போட்டியில் தெரிந்தெடுக்கப்பட்ட ஓவியங்களின் கண் காட்சி நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை இடம் பெறவுள்ளது. (உ-19)

8.00 மணிக்கு ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச இந்து குருமார் பீடாதிபதி சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள், சைவகுருமார் சபைச் செயலர் சிவஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக்கள், இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி. கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர்பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், மேலதிக அரசாங்க ... கட்டடப் பொறியியலாளர்ப.கிரிதரன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் ப.இராமலிங்கம், நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையைஆதீனபராமரிப்பு நிதியச் செயலாளர் கவிஞர் சோ. பத்மநாதனும், நன்றியுரையை ஆதீன சித்தாந்த ஆசிரியர் மு.திருஞானசம்பந்த பிள்ளையும்நிகழ்த்தவுள்ளனர். மாலைநிகழ்ச்சிகள் பி.ப4.00மணிக்கு ஆதீன ஆலோசகர் சபை உறுப்பினர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெறும். தொடர்ந்து 10 தினங்களிற்கு மாலை4.00 மணிக்கு இசை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சிந்தனைக்கு விருந்து

### வெடி தாக்கித் தந்த முடம்

செக்கில் நசியும் சிறியஎள் போல்நெருக்கில்
சிக்கியே நின்றுபஸ்சில் சீரழியும் - பொக்கைவாய்
ஆச்சிக்குச் சீற்றளிக்க ஆகா தவனுக்குத்
தாக்கிவெடி தந்தமுடத் தாள்:

'பழையவன்'

# உலகத் தலைவர்களின் வாகனத் தொடர் மீது தாக்குதல் நடத்தத் திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் தலைநகர் உட்பட பல முக்கிய இடங்களில் உலகத்தலைவர்களின் வாகனத் தொடர்மீது தாக்குதல் நடத்துவதற்கான மாதிரிப் பயிற்சி ஒன்றை அல்கைதா அமைப்பினர் நடத்தியுள்ளனர் என்பதைக்காட்டும்வீடியோப் படமொன்றை அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

சாதாரண தெளிவுடன் காணப்படும் இந்தவீடியோ ஒளிநாடாவில் அரபு, பாகிஸ்தானிய, மற்றும் ஆபிரிக்க போராளிகள் ஆங்கிலத்தில் பேசுவதாக அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து தலிபான் அமைப்பினர் விரட்டி அடிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்த பயிற்சி முகாமில் இருந்து வடக்குக்கூட்டணியினர் இந்த வீடியோ நாடாவை கண்டு பிடித்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் இரவு அவுஸ்திரேலிய ஒளிபரப்பக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட வீடியோப் பிரதியின் பின்னர் அமெரிக்கா தனது நாட்டைக் கடுமையாகப் பலப்படுத்தியுள்ளது. (செ-7)

# நிலத்தடி நீரில் ஆசனிக் விஷம்

(டாக்கா)

பங்களாதேஷின் நிலத்தடி நீரில் கலந்துள்ள ஆசனிக் விஷம், நீர்ப்பாசனம் மூலம் உணவுப் பயிர்களைப்பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாய விற்பன்னர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீரிலும், உணவுத்தாவரங்களிலும் ஆசனிக்விஷம் கலந்துள்ளதை அடுத்து சுகாதார மற்றும் பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பை பங்களாதேஷ் எதிர் நோக்க வேண்டியிருக்குமென அவர்கள் மேலும் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பங்களாதேஷில் சுமார் 10 ஆயிரம் பேர் ஆசனிக்கினால்பலநோய்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் 50 லட்சம் பேர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் நிலத்தடி நீரில் ஆசனிக் கலந்துள்ளதால் மேற்பரப்பில் உள்ள நீரையே பாவிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (உ-7)

# ரீ. வி பார்த்த வேளை மயக்கமுற்று வீழ்ந்த அமெரிக்க அதிபர் புஷ்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் திடீரெனமயக்கமுற்றுவீழ்ந்தசம்பவம்நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளைமாளிகையில் இருந்து உதைபந்தாட்ட நிகழ்வொன்றை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த வேளையிலேயே கதிரையில் இருந்து மயங்கி வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, உடன் விரைந்த வெள்ளைமாளிகை மருத்துவர்கள் அவருக்கு அவசர சிகிச்சையை மேற்கொண்டு உடலில் எந்தவித நோயும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். (உ-7)

# சீனப்பிரதமர்இந்தியாவுக்கு ஆறு நாள் விஜயம்

(புதுடில்லி)

சீனப் பிரதமர் சூறங்ஜி ஆறு நாள் அரச முறை விஜயமாக நேற்று முன்தினம் இந்தியா போய்ச் சேர்ந்துள்ளார்.

ஆக்ரா சென்ற பிரதமரும் மனைவியும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டுள்ள அதிகாரிகள் உட்பட நேற்று மாலை பிரதமர்வாஜ்பாயைச் சந்தித்து உத்தியோக பூர்வ பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்.

தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் மற்றும்வெளியுறவு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துபேச்சுவார்த்தை நடத்த

# தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சர் ஜயலத்துடன் சந்திப்பு

## குறைபாடுகள் குறித்து மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு, யாழ்ப்பாணம் வருகை தந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, மற்றும் அவரது செயலாளர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இச்சந்திப்பின்போது யாழ் மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைகள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

தூதுக்குழுவினால் அமைச்சரின் கவனத்துக்குக் கீழ்வரும் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

● யாழ் மாவட்டத்தில் இராணுவ முகாம்களாக இருக்கும் பாடசாலைகளில் இருந்து அவர்களை வெளியேற்றி மாணவர்களின் கல்விக்கு உத்தரவாதம் வழங்குதல்.

● படை நடவடிக்கையால் சேதமடைந்திருக்கும் தென்மராட்சிப் பாடசாலைகளைப் புனரமைத்து மீண்டும் இயக்குதல்.

● யாழ் மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளை, சொந்த இடத்தில் இயங்க ஏற்பாடு செய்வதுடன், அங்கு புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடி, பொறிவெடிகளை அகற்றுதல்.

● இடம்பெயர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு, அவர்களின் சொத்து இழப்புக்கு, நட்டஈடு வழங்குதல்.

● வழங்கப்படாதிருக்கும் பாக்கிச்சம்பளம், பத்துமாதக் கடன், இடர்காலக் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்க நிதி ஒதுக்கீடு செய்தல்.

● யாழ்ப்பாணம் கல்விக் கல்லூரி, பலாலி ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

● கணனி மூலக் கல்வியை யாழ்மாவட்ட மற்றும் வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்கும் பொருட்டு தரம் 11 வரை உள்ள பாடசாலைகளுக்கு கணனிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

● இலவச பாடநூல்கள் ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு கிடைக்கும் அதே காலத்தில், வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கும் கிடைக்க ஆவன செய்தல்.

● ஆசிரியமையம் அமைத்தல், வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரிய நியமனம் செய்தல், வடக்கு கிழக்கு மாகாண சபையில் குவிந்திருக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கல். போன்ற விடயங்கள் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி பிரச்சினைக்கு தன்னால் முடியுமானவரை தீர்வுபெற்றுத்தர முயற்சிப்பதாக அமைச்சர் உறுதிபளித்தார். (இ)

# 'றுகுணு'பல்கலை மாணவர் வளாகம் செல்லத் தடை

றுகுண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மறு அறிவித்தல்வரை வளாகத்திற்குள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு பயிற்சிக்காக சென்ற மருத்துவபீட மாணவர்கள் அங்கு பணிபுரியும் தாதிமாரை தாக்கியமையாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித்சேனரத்தின தெரிவித்துள்ளார். (இ-4)

# முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கை துரிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வந்த புனர்வாழ்வு மீள்குடியேற்றஅமைச்சர் டாக்டர் ஜயலத் கடந்த 90 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்துஇடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக துரிதநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாகதெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப்பெரியகடைப் பகுதியிலுள்ள ஜும்மாபள்ளிவாசலில் அமைச்சருக்கு அளிக்கப்பட்டவரவேற்பில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்துதெரிவிக்கையில், முஸ்லிம்மக்களைகுடியெற்றுவது தொடர்பாக ஆலோசனைச் சபை அமைக்கப்படவுள்ளதாகவும் அதில் யாழ்ப்பாணத்திலிருந்துஇடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களும் அங்கம் வகிப்பர் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த உதவுக

## விவசாயிகள் சம்மேளனம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், வாழைப்பழம், புகையிலை மற்றும் காய்கறி வகைகளைச் சந்தைப்படுத்துவதற்கு போதிய வசதிகள் இங்கு இல்லாதபடியால் தென்பகுதியில் அவற்றைச்சந்தைப்படுத்துவதற்கும் ஒழுங்காக அங்கு கொண்டு செல்வதற்கும் தரை வழிப் பாதை வசதியை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயிகள் சம்மேளனம் யாழ். வந்துள்ள புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கையளித்த மகஜரில் மேற்

# பாகிஸ்தான் விட்டுஅகலும் அமெரிக்க விமானங்கள்

ளைப் பார்வையிட்டுள்ள துடன்,

தித்துபேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (து)

## ஆயிரத்து 100 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமபாத்)

உலக நாடுகளிடையே சர்ச்சைகளை ஏற்படுத்தி வரும் இயக்கங்களைத் தடை செய்யும் முகமாக பாகிஸ்தானில் 5 தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளதையடுத்து இது வரை பொலிஸாரால் ஆயிரத்து 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட இயக்கங்களில் சுமார் 400 அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

மேலும், மதத்தீவிரவாதிகள் 200 பேரையும் கைது செய்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் எல்லைப் பகுதியான பஞ்சாப் மாநிலத்திலிருந்து நூற்றுக்கு அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-8)

## அ.இ அ.தி.மு.க தமிழ் மாநில காங்கிரஸ் உறவில் விரிசல்

(சென்னை)

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு தமிழ் மாநில காங்கிரஸிற்கும் இடையேயான உறவுகள் முறிந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் ஆண்டிப்பட்டி உட்பட்டதேர்தல்களில் அ.இ.அ. தி.மு. கவை ஆதரிக்கப் போவதில்லையென்று த.மா.கா. தலைவர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏனைய அங்கத்துவக்கட்சிகளுடன்சேர்ந்து போட்டியிட இருப்பதை அறிவிக்கப் போவதாகவும் தெரிவித்தார். (து)

## அமெரிக்க விமானங்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்காவிற்கு சொந்தமான விமானங்கள் மீண்டும் அமெரிக்காவிற்கு கொண்டுசெல்லப்படவுள்ளன.

தலிபான்களுடனான போருக்காக அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த அவ் விமானங்கள் போர்ஓய்ந்ததன்காரணத்தால் பாகிஸ்தானில் நிலைகொள்ளத்தேவையில்லையென்று தெரிவிக்கப்படுகிறது

இப்போது பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதால் இந்தியாவும் எல்லைப்புறங்களில் படைகளைக் குவித்து வருகின்றது.

## இந்திய- பாக். பிரச்சினை மூன்றாவது நாட்டு மத்தியஸ்தத்திற்கு எதிர்ப்பு

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமுள்ள பிரச்சினையில் மூன்றாவது ஒருநாடு மத்தியஸ்தம் வகிப்பதற்கு இடமில்லையென்று எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவித்தன

பாகிஸ்தான் அதிபர்நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் எல்லாப்பிரச்சினை தொடர்பாகவும் பயங்கரவாதம் தொடர்பாகவும் தெரிவித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் பொருட்டு பிரதமர் வாஜ்பாய் கூட்டிய கூட்டத்தில் மேற்கண்ட கருத்தினை எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

இதேவேளை மார்க்கிஸ் கம்யூனிஸ்டுகள் முஷாரப் சிலவிடயங்களில் இறங்கிவந்திருப்பதால் அவைபற்றி ஆலோசிக்க வேண்டும் என்று தெரிவித்தன.

இதற்கிடையில் பாகிஸ்தான் அதிபர்ஜெனரல் முஷாரப் மத ஸ்தாபனங்களைக் கண்டித் திருப்பது வரவேற்கக் கூடியதென்றும் அவை செயல்வடிவில் எவ்வளவு தூரம் இடம் பெறுமென்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் அடுத்த நடவடிக்கையென்று இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார். (உ.)

ஜயவர்த்தனாவிடம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தென்மராட்சி, வலிகாமம், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 6 ஆயிரம் ஹெக்டேயர் வரையான விளைநிலங்கள் இப்போது விவசாயம் செய்யப்படாத நிலையில் உள்ளன.

அப்பகுதிகளிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றி விவசாயிகளை மீளக்குடியேற்றி அவர்கள் விவசாயத்தினை மேற்கொள்ள தேவையான வசதிகளை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயத்திற்குத் தேவையான இரசாயன பொருள்கள் உரவகைகள், விதைகள் முதலியன யாழ். மாவட்டத்தில் மிகவும் உச்ச விலைக்கு விற்கப்படுகின்றன. கொழும்பு விலையில் இங்கு அவைகள் விற்கப்படுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்.

சேதமடைந்த விவசாயிகளின் வீடுகளுக்கான நிவாரணப் பணம் வழங்கவும், மின்சாரவசதிகள் எரிபொருள் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

உளரெனினும் இல்லா ரொடு
ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச் சொல்லா தார்
குறள்

# வலம்புரி

## தவறணைச் சண்டை !

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று முன்தினம் யாழ் செயலகத்தில் மாநாடொன்றை நடத்தியிருந்தார். யாழ் குடாநாட்டில் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் நோக்குடனேயே இம் மாநாடு கூட்டப்பட்டிருந்தது .

இம்மாநாட்டில் கலந்துகொண்ட அரசியல் வாதிகள் சமாதானப் பேச்சின் அவசியம், புலிகள்மீதான தடையைஉடன் நீக்குதல், பாதை திறப்பு, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, காணாமற்போனோர், கைதாகி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர், போசாக்கு நிலை, எரிபொருள் தட்டுப்பாடு, இலவசப் பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில் கிடைக்காமை, மிதிவெடி அபாயம், ஊரடங்குத் தொல்லை, மருத்துவ வசதியீனங்கள் போன்றமுக்கிய விடயங்களை முன்வைத்து முழங்கித் தள்ளுவார்கள் என பலரும் எதிர்பார்த்திருந்தனர் ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக அங்கு நடந்த உரைகள் தலைகீழாக அமைந்திருந்தது. ஒருவர், சாதிச்சண்டையில்ஈடுபட இன்னொருவர் ஜனநாயகச் சூழல்குறித்து பழைய தோம்பை அவிழ்த்துவிட மற்றவர்தமக்கு எதிரான அதிகாரிகளை எப்படியும் மாற்றித் தமது சபதத்தை நிறைவேற்ற வேண்மென த்தம் பிரச்சினைகளை முன்வைத்தே முழங்கித் தள்ளினர்.

எந்த அரசியல் வாதியும் மக்களின் பிரச்சினைகள் குறித்து எதுவுமே பேசவில்லை. எப்படியிருக்கிறது நிலைமை. தமிழ் எம்பிக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை பட்டியலிட்டு அதனை அமைச்சர் ஜெயலத்திடம் சமர்ப்பித்து உரையாற்றாமல் ஆட்டிற்குள் மாடு என்பது போல் உரையாற்றி அமைச்சர் ஜெயலத்தின் யாழ்வருகையைவீணாக்கி விட்டனர்.

எமது அரசியல் வாதிகளின் திட்டமிடாதஉரைகளும் பிதற்றல்களுமே தமிழர்களை சிங்களப் பேரினவாதம் குறைத்து மதிப்பிடக் காரணமாயிற்று. இதற்கு நேற்று முன்தினம் யாழ் செயலகத்தில் நம் அரசியல்வாதிகள் நடத்தியதவறணைச் சண்டையும் நல்லதோர் உதாரணமாகும்.

# மூலிகைகளின் மருத்துவ குணங்களைப் பற்றி சித்தர்கள் கூறியவை பொய்யானதில்லை

**டாக்டர் பே. எட்வேர்ட்**
உயரப்புலம்

இலங்கையில்
1. ஆங்கில மருத்துவம்
2. சித்த மருத்துவம்
3. ஆயுள்வேத மருத்துவம்
4. யூனானி மருத்துவம்
5. அக்கியூபங்ஸர் மருத்துவம் ஆகிய மருத்துவப் பிரிவுகள் காணப்படுகின்றன. ஆங்கில மருத்துவ முறையிலும் ஆயுள் வேத மருத்துவ முறையிலும் மக்கள நம்பிக்கை வைத்திருந்த போதிலும் ஆங்கில மருத்துவத்துக்கே மக்கள் முதலிடம் கொடுக்கின்றார்கள் என்பது மறக்க முடியாத உண்மையாகும். காரணம் வியாதிகளைக் கண்டு பிடிக்கும் நவீன விஞ்ஞான கருவிகளும் சத்திர சிகிச்சை முறைகளும் ஆங்கில மருத்துவமுறையில் மட்டுமே உண்டு. அதனால் மக்களுக்கு நம்பிக்கைக்குரிய ஒரு மருத்துவ முறையாக இது திகழ்கின்றது. இது உலகளாவிய ரீதியில் சகல நாட்டையும் பற்றிப் பிடித்துக் கொண்டது. ஆங்கில மருத்துவத்துறையோடு

## மருத்துவ விளக்கம்

போட்டி போட உலகில் எந்த ஒரு மருத்துவத்துறையாலும் இயலாது.

சித்த மருத்துவம்

கி.மு. 500 ஆண்டுகால கட்டத்தில் அகஸ்திய முனிவராலும் அவரது சிஷ்யர்கள் 18 முனிவர்களாலும் ஆய்வு செய்து பாடப்பட்டமுறைகள் சித்த மருத்துவம் எனப்படும். இந்த மருத்துவ முறைகள் இன்று வரை பொய்யானதில்லை பிழையானதுமில்லை. ஒவ்வொரு மூலிகைகள் பற்றியும் அதன் குணம், எந்த மூலிகை எந்த வியாதியைக் குணமாக்கவல்லது என்பதை தெளிவாக கூறியுள்ளார்கள். எமது காலடிபடும் இடமெல்லாம் மூலிகைகள்.

எமது கண்கள் பார்க்கும் இடமெல்லாம் மூலிகைகள். உலகத்தில்உள்ள சகல செடி கொடி, புல்பூண்டு யாவற்றிற்கும் விளக்கம் கூறி, அதை மக்களுக்கு அர்ப்பணித்த பெருமை பதினெண் சித்தர்களையே சாரும்.

நம்மூர் மூலிகைகள்

உலகத்திலுள்ள எந்த ஒரு மருத்துவப் பிரிவானாலும் மருந்தை தயாரிக்க இந்த மூலிகைகளைப் பயன்படுத்தியே ஆகவேண்டும். அதைவிட மருத்துவத்துறைக்கு வேறு வழியில்லை. ரூபங்கள் தோற்றங்கள் மாறியிருக்கும். ஆனால் மூலப்பொருள் சித்த மருத்துவ மூலப் பொருளாகவேஇருக்கும். உதாரணமாக கடந்த 25 ஆண்டுகளாக ''பட்டிவேர்'' இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இந்தபட்டிவேரிலிருந்து புற்றுநோய்க்கு (CANCER) மருந்து தயாரிக்கின்றார்கள். இலங்கையிலிருந்து டென்மார்க், இந்தியா ஆகியநாடுகட்கு ''தேங்காய்ப் பூக் கீரை'' பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்த மூலிகையால் சலத்தைப் போக்கவும் குண்டிக்காயை சுத்தம் பண்ணவும் ஒருமருந்து தயாரிக்கப்படுகின்றது. (அதன் பெயர் 1. Lasix (2) K. C. L (3) ADDI– K) பார்வைக்கு அழகாக வெளிநாடுகள் மாத்திரையாக உற்பத்தி செய்து இலங்கைக்கும் உலக நாடுகட்கும் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. நம்மவர் கையேந்தி, பெருந்தொகைப் பணம் கொடுத்து அவற்றை வாங்குகின்றார்கள்.

ஆயுள் வேத மருத்துவம்

சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து, கையாளப்படும் ஆயுள் வேத மருத்துவ முறை அவர்கட்கு சொந்தமானதுஅல்ல. பாரம்பரியமாக-மரபு வழிவந்த முறையும் அல்ல. சித்த மருத்துவத்தில் இருந்து மாற்றப்பட்ட ஒரு முறையாகும். புத்த பிக்குகளில் யாரும் முனிவராகவும் இல்லை. மருத்துவ வியாதி விபரங்கள்- மருந்து முறைகள்- மூலிகை மர்மங்கள்எதையுமே சிங்கள மரபில் யாரும் தோற்றுவித்ததாக வரலாறு கிடையாது. ஆயுள்வேதமுறை தான் சரி என்பது அவர்களது வாதம்.

சித்த- ஆயுள்வேத மருத்துவம்

சித்த மருத்துவத்திற்கும் ஆயுள வேத மருத்துவத்திற்கும் இடையில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. இரண்டும் ஒன்றுதான். இந்த ஒரு துறையை இரண்டாக கூறு போட்டு பிரித்து வைத்து சிங்கள மக்களே உதாரணமாக கொழும்பு கொட்டா றோட்டில் ஆயுள வேத மருத்துவக் கல்லூரி பல ஆண்டுகளாக இருக்கின்றது. யாழ்ப்பாணப் பகுதிக்கு ஓர் ஆயுள் வேதக் கல்லூரிதேவையென பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகள் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசுயாழ்ப்பாணத்துக்கு சித்த மருத்துவக் கல்லூரியை தந்தது. ''சித்த ஆயுள் வேதக்கல்லூரி தான் எமக்கு தேவை'' என்றோ அல்லது ''சிங்கள நாட்டில் (கொழும்பு) ஆயுள் வேதக்கல்லூரி இருக்கின்றது. எமக்கு சித்த மருத்துவக் கல்லூரி தேவையில்லை'' என்றோஎமது அரசியல்வாதிகள் யாவருமேகேட்கவில்லை. இந்தப் புறக்கணிப்பு நம்மவர்கட்கு புரியவில்லை. சித்த மருத்துவத்துக்கும்ஆயுள்வேத மருத்துவத்துக்கும் இடையேயுள்ள மர்மம் மக்களுக்கும் அரசியல்வாதிகட்கும் புரியவில்லை.

சித்த -ஆயுள் வேதம் தோன்றிய வரலாறு

1330திருக்குறளை திருவள்ளுவர் எவ்வாறு பாடினார். எவ்வாறு எழுதினார்? திருவள்ளுவர் எந்தப்பாடசாலையில் கல்விபயின்றார்? இவர் ஓர் பட்டதாரியா? ஔவை யார் எந்தக்கல்லூரியில் கல்விகற்றார்? கம்பராமாயணத்தை இயற்றிய வான்மீகி முனிவர் எந்தக் கல்லூரியில் கல்விபயின்றார்? புதிய ஏற்பாடு (பைபிள் -வேதாகமம்) எழுதிய அப்போஸ்தலர்கள் எங்கே கல்விகற்றார்கள்? பழைய ஏற்பாட்டை எழுதியவர் எங்கேபடித்தார்? இவர்கள் எங்கேயும்படிக்கவில்லை. அப்படியானால் இந்த அறிவுரைகளையும் பொன்மொழிகளையும் கூறும் வல்லமை இவர்கட்கு எங்கிருந்து வந்தது? இக்கேள்விகட்குயாருமே பதில்கூற இயலாது. இவர்கட்கு இயற்கையாக இருந்த ஞானம் அறிவு ஆற்றல் தான் காரணம் இது ஓர் ''ஞானசக்தி'' எனகூறுவதில் தப்பில்லை.

இதேபோன்றுதான் அகஸ்திய முனிவரும் 18 சித்தர்களும் ஒவ்வொரு மூலிகைகளையும்ஆராய்ந்துஎந்தெந்த மூலிகைகள் எந்தெந்த வியாதிகளை குணமாக்கும் என ஆராய்ந்து எழுதப்பட்டது தான் சித்த - ஆயுள்வேதம். இதில் எவராலும் பிழை கண்டுபிடிக்க இயலாது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை வடக்கு-கிழக்கில் எல்லைநிர்ணயம் வேண்டாம்

## அமைச்சர் அலுவிகாரையிடம் ஜோசப் எம்.பி. கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்கிராமங்கள் சிலவற்றை இணைத்து கோறளை முஸ்லிம் மத்திய செயலகப் பிரிவை உருவாக்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை



தடுத்துநிறுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்'

பொதுநிர்வாக அமைச்சர் அலித்அலுவிகாரையைநேற்று அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தபோதே ஜோசப் பரராசசிங்கம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது ; கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்பாக தமிழ்ப்பகுதிகளை இணைத்து கோறளை மத்தியமுஸ்லிம் பிரதேசங்களை இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொளளப்பட்டது. இந்நடவடிக்கைக்கு தமிழர் கூட்டமைப்பு பலத்த எதிர்ப்புத் தெரிவித்தமையால் இடைநிறுத்தப்பட்டது.

இனங்களுக்கிடையே ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படக்கூடிய நடவடிக்கைகளை கடந்த அரசு மேற்கொண்டதைப்போல புதிய அரசும் மேற்கொள்ள கூடாதென அவர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வுகாணும்வரைவடக்கு கிழக்கில் எல்லை நிர்ணயம் மீள்பரிசீலனை செய்வதை அரசாங்கம் நிறுத்தவேண்டுமெனவும் ஜோசப்பரராசசிங்கம் மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை கோறளைப் பற்று மேற்கு முஸ்லிம் பிரதேச செயலக பிரிவிலுள்ள செம்மன்ஓடை மாவடிச்சேனை, றெயின்ஓடைமேற்கு, றெயின்ஓடை வடக்கு. மற்றும் வாழைச்சேனை முஸ்லிம் கிராமங்களையும் வாகரை

(2ம் பக்கம் பார்க்க)

### தினசரி தியானம்

### மனம், மொழிஒற்றுமை

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.

திருஅருட்பா

மனமொன்று எண்ண, மொழியொன்று பேசும் புன்மையனுக்கு எண்ணியாங்கு இயம்பும் திண்மையைத் தகையே, நீதந்தருள்வாயாக.

பூமிக்கும் செடிக்கும் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம் சிந்தைக்கும் சொல்லுக்குமிடையில் இருக்க வேண்டும். மனிதன் ஏத்தகையகொள்கையை உடையவன் என்பது முக்கியமானதல்ல. உள்ளமும், உரையும் ஒத்திருக்குமளவு உள்ளம் உறுதி பெறுகிறது. உரையானது உயிர் பெறுகிறது. மனதையும் மொழியையும் ஒன்று படுத்துவதே யோகசாதனத்தின் முதற்படியாகும்.

- ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# சுதந்திர இலங்கைக்குள் சமாதானம் ஐ.தே.முன்னணி ஆட்சியில் ஏற்படும்

## அமைச்சர் ஜயலத் சிறுப்பிட்டியில் உரை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்துக்கான பாதையில் பெருந்தடைகளும் கஷ்டங்களும் உள்ளன ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டி சுதந்திர இலங்கையில் சமாதானத்தை ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் ஏற்படுத்துவோம்.

இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சா டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று நல்லூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் குழு பின்னர் வடமராட்சிக்கு விஜயம் மேற்கொண்டது.

வடமராட்சிக்கு செல்லும் வழியில் சிறுப்பிட்டிப்பகுதியில் அமைச்சர் குழுவை வரவேற்று அப்பகுதி பொதுமக்கள் அங்கு அமைச்சர்களுக்கு மாலை அணிவித்து பெரும் வரவேற்பளித்தனர் அவ்வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ஜெயலத் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி யில் இலங்கையில் மிக விரைவில் சமாதானம் ஏற்படும் என்று உறுதியளித்தார்.

இதேவேளை நெல்லியடிப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் குழுவை அப்பகுதி வர்த்தகர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். அமைச்சர் குழு பருத்தித்துறை பகுதிக்கும் விஜயம் செய்து அங்கு இறங்கு துறைப்பகுதியை பார்வையிட்டதுடன் மீனவர் சங்க பிரதி நிதிகளுடனும் கலந்துரையாடினர். (இ.10)

### யாழ்பல்கலை.....

துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் பல்கலைக் கழக மாணவர்கள் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அமைச்சர்களுக்கு எடுத்துக்கூறினர்

அமைச்சர் குழுவினர் பல்கலைக் கழக வளாகத்தை சுற்றிப்பார்வையிட்ட பின்னர் திறந்த ஜீப் வண்டி ஒன்றில் இருந்தவாறு அமைச்சர் ஜெயலத் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அரசியல் நோக்கத்துடன் நான் இங்கு வரவில்லை வடக்கையும் தெற்கையும் இணைத்து சமாதானத்தை ஏற்படுத்தவே வந்துள்ளேன் என்று அவர் கூறினார். இவ்விஜயத்தின் போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதற்கென 200 மூக்குக்கண்ணாடிகளை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திடம் கையளித்தார். (வ)

### நோர்வேக்குழு...

கூறி அரச தரப்புக்கருத்துக்களையும் கேட்டறிந்தனர். இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் அரச தரப்பு கருத்துக்களை புலிகளுக்கு எடுத்துக் கூறும் முகமாகவே பால சிங்கத்தை நோர்வேயின் சமாதான குழு இன்று சந்திக்கவுள்ளது.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணக்கப்பாட்டுக்கு வரும் பட்சத்தில் 27ந் திகதிக்குள் நிரந்தர யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் இருசாராரும் கைச்சாத்திடலாம் என நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்றைய சந்திப்பில் நோர்வேயின் தூதுக்குழுவில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஐவர் ஹெல்கீசன், நோர்வேயின் முன்னாள் சமாதான ஏற்பாட்டாளர் எரிக்சோல் ஹெய்ம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி செல்வி ஜஸ்ரின் ஸ்ரோம்ஸ் ஸ்ரால் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (வ)

### தடை...

வியாழன், சனி ஆகிய நாட்களில் ஒரு நாளைக்கு 30லொறிவீதம் வாரத்தில் 120லொறிகளில் உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட உள்ளன.

வன்னிக்கு எடுத்துச்செல்லப்படும் உணவுப்பொருட்களுடன் வாகனங்களுக்குரிய பற்றரி வகைகள் துவிச்சக்கர வண்டிக்கான ரயர் ரியூப்புக்கள் கூரைத்தகடுகள் ஜெனரேற்றர்கள் பாடசாலைப் புத்தகங்கள், காகிதாதிகள், மின்சார உபகரணங்கள் சவர்க்கார வகைகள் அடங்கியிருப்பதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (வ)

### அமைச்சர்...

பகுதிக்குச் சென்ற இக்குழுவினர் அங்குள்ள நிலைமையை பார்வையிட்டுக்கொண்டு ஏ-9 யாழ் கண்டி வீதி ஊடாக சாவகச்சேரி நகருக்கு சென்றனர்.

யுத்தத்தின் தாக்கத்தினால் இடிந்து போயுள்ள கட்டிடங்கள், குண்டும் குழியுமான வீதிகள், தரையில்லாது முறிந்து கிடக்கும் மரங்கள் என எங்கும் காணப்பட்ட் அழிவுக்காட்சிகளைக்கண்டு அமைச்சர் குழுவினர் அதிர்ச்சி அடைந்தனர்.

அத்துடன் அங்கு புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் பொறிவெடிகளுக்கு மத்தியிலும் நகரப் பிரதேசத்தை பார்வையிட்ட அமைச்சர்கள் சாவகச்சேரி வர்த்தக பிரமுகர்களுடனும் கலந்துரையாடினர்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கைதடியிலுள்ள சித்தமருத்துவ மனை, கோப்பாய் கைதடி பாலம் நாவக்குழி பாலம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

இதேவேளை அமைச்சர் ஜயலத் தென்மராட்சிப்பகுதிக்கு விஜயம்

# புகையிரதம் புரண்டதில் 71/2கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

கண்டியில் இருந்து புறப்பட்ட கடுகதி ரயில் தடம் புரண்டதில் சுமார் ஏழரைக்கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த ரயில் விபத்தில் கொல்லப்பட்ட பத்துப்பேருக்கு நட்டஈடு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது அதிகாரிகளின் கவனயீனத்தினாலேயே இவ்விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்துத் தொடர்பாக புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (வ)

## பரீட்சை ஆணையாளர் யாழ் வருவார்

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர். அமரக்கோன். மிகவிரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)



கொக்குவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையத்தை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கமணிபல ராஜன் நாடாவை வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காண்கிறீர்கள்


அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்
காவேரி பட்டுச் சோலையின்
பொங்கல் வாழ்த்துக்கள்





## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் எழுத்தாளர் திருமதி விஜயாம்பிகை கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தாயாரும், எமது சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் கணேசலிங்கம் அவர்களின் அன்பு மாமியருமாகிய

**திருமதி**
**நாகம்மா சின்னத்துரை**
**அவர்கள்**

அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்க்கின்றோம்.

பணிப்பாளர்கள்
பணியாளர்கள்.

நெடுந்தீவு.பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு

பட்டுப் புடவைகளின் ஸ்தாபனம்




இல.48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். T.P2333

(C/3248)


மனை, கோப்பாய் கைதடி பாலம் நாவக்குழி பாலம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

இதேவேளை அமைச்சர் ஜயலத் தென்மராட்சிப்பகுதிக்கு விஜயம் செய்யமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்ததுடன் அபிவிருத்திக்கும் அங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கும் விரைவில் ஏற்பாடு செய்வதாக ஏற் உறுதியளித்துள்ளார். (இ10)


A/L 2004

கலை

வர்த்தகப்பிரிவு

19/01/02 - 8 AM

BECON

யாழ் 4193



பணிப்பாளர்கள்
பணியாளர்கள்.

நெடுந்தீவு.பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு
2002-05-15

(C/3273)



## SUBRA (14) கல்வி நிறுவனத்தின் வாழ்த்து

எமது நிறுவன பழைய மாணவனும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் எமது நிறுவன முன்னாள் தமிழ் ஆசான் திருவாளர் சின்னத்தம்பி ஆசிரியர் அவர்களது புத்திரனுமாகிய திரு.நோபிள் சுரேந்திரன் அவர்கள் விஞ்ஞான ஆய்வில் ஜனாபதிபதி விருது பெற்றமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிறுவன இயக்குனர்,
சதாசிவம் ஐங்கரன்
ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்

(C/3272)



தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்



நிருத்திகா ஜுவலர்ஸ்



177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P No. 021-2694

(C/2367)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.